வரலாறு பாட அடைவு மேம்பாட்டுச் செயற்றிட்டம் - 2020

# உயர்மட்ட வினா – விடைத் தொகுப்பு

# தரம் 11

ஆக்கம் :- நா.செல்வச்சந்திரன்

யா/அராலி இந்துக் கல்லூரி

0779356158

# அலகு – 01
# கைத்தொழிற்புரட்சி

**01 கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?**

1 சனத்தொகை அதிகரிப்பு

2 கைத்தொழில் துறைக்குத் தேவையான ஊழியர்கள் இலகுவாகக் கிடைத்தமை

3 பிரித்தானியாவில் காணப்பட்ட அரசியல் உறுதி நிலை

4 நிலமானிய முறையின் வீழ்ச்சி

5 விருத்தியடைந்த வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் தோற்றம்

6 மூலப்பொருட்களை இலகுவாகப் பெறமுடிந்தமை

7 குடியேற்ற நாடுகள் அதிகரித்தமையும் வியாபாரம் வளர்ச்சியடைந்தமையும்

**02 நெசவுக்கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக.**

1 பறக்கும் நூனாழி – ஜோன்கே

2 நூல் நூற்றும் ஜெனி – ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ்

3 நூல் நூற்கும் மியூல் இயந்திரம் - சாமுவேல் குறோம்டன்

4 தையல் இயந்திரம் - எலியஸ்கோவே

**03 இரும்புருக்குக் கைத்தொழிலில் இடம்பெற்ற கணடுப்பிடிப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக?**

1 நிலக்கரி மூலம் இரும்பத்தாதை உருக்கும் முறை. – ஆபிரகாம் டார்பி

2 ரோலர் இயந்திரம் மூலம் பதப்படுத்தப்பட்ட இரும்பு – ஹென்றிகோட்

3 இரும்பிலுள்ள கழிவுகளை அகற்றும் முறை – ஹென்றி பேஸ்மர்

4 இரும்பை உருக்க மின்சார சூளை – வில்லியம் சீமன்ஸ்

**04 நிலக்கரிக் கைத்தொழிலில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்கள் எவை?**

1 சுரங்கத்தினுள் சேரும் நீரை வெளியேற்றவும், குழாய்கள் மூலம் குளிரான வளியை சுரங்கத்தினுள் செலுத்தி குளிரூட்டும் முறை – தோமஸ் நியூகொமன்

2 கொதிநீராவி இயந்திரம் - ஜேம்ஸ்வாட்

3 பாதுகாப்பு விளக்கு - ஹம்பிறிடேவி

4 இரும்புக் கேபிள் கம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டமை

**05 போக்குவரத்துத் துறையில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்களைக் குறிப்பிடுக.**

1 நீராவியால் இயங்கும் புகையிரதம் - ஜோர்ஜ் ஸ்டிவன்சன்

2 புகைப்படகு – ரொபட்புல்டன்

3 புகைக்கப்பல் - ஹென்றிபெல்

4 மோட்டார் வாகனம் - டெம்ளர்

5 ஆகாய விமானம் - றைட் சகோதரர்கள்

6 பெருந்தெருக்களை அமைக்கும் முறை – ஜோன் மெக்கடம்

**06 தொடர்பாடல் துறையயில் இடம்பெற்ற கண்டுபிடிப்புக்கள் எவை?**

1 பெனீ தபால் சேவை

2 தொலைபேசி – அலெக்சாண்டர் கிரகம்பெல்

3 தந்தி – சாமுவேல் மோர்ஸ்

4 வானொலி – குக்லி மார்க்கோனி

5 தொலைக்காட்சி – ஜோன்லொகிபெயார்ட்

**07 விவசாயத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை ∴ காரணங்கள் எவை?**

1 பாரிய விவசாயப் பண்ணைகள் உருவாக்கப்பட்டமை.

2 சுழற்சிமுறை, நிலமாற்று முறைப் பயிர்ச்செய்கை

3 விலங்குவளர்ப்பில் புதிய தொழில்நுட்பமுறை

4 புதிய விவசாய முறைகளும் நவீன உபகரணங்களின் பயன்படும்

## 08 வேறு நாடுகளில் கைத்தொழிற்புரட்சி பரவியமைக்கான காரணங்கள் எவை?

1 உலகம் முழுவதும் சனத்தொகை துரித வளர்ச்சியை அடைந்தமை

2 பொருள்களுக்கான கேள்வி அதிகரித்தமை.

3 ஐரோப்பாவில் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி

4 பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டமை.

## 09 கைத்தொழிற் புரட்சியினால் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை

1 உச்ச இலாபத்தைப் பெறும் நோக்குடன் பணத்தை முதலீடு செய்யும் பணக்கார வகுப்பினரும், உழைப்பை விற்று வாழ்க்கை நடத்தும் ஏழை வகுப்பினரும் உருவாகினர்.

2 முதலாளி – தொழிலாளி முரண்பாட்டினால் தொழிற்சங்கங்கள் தோற்றம் பெற்றமை.

3 பொதுவுடமைவாதம், தாராண்மைவாதக் கொள்கைக் தோற்றம் பெற்றமை.

4 பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடாக் கொள்கையை அடம்சிமித் என்பவர் முன்வைத்தார்.

5 குடியேற்றவாத நாடுகளைக் கைப்பற்றுவதில் போட்டி ஏற்பட்டமை.

## 10 கைத்தொழிற் புரட்சியினால் பொரளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை

1 கைத்தொழில் உற்பத்தி அதிகரிப்பு, வர்த்தக நடவடிக்கை பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகித்தல் என்பன ஏற்பட்டன.

2 தன்னிறைவுப் பொருளாதாரம் மறைந்து சம்பளத்திற்கு வேலை செய்யும் வகுப்பு தோன்றியது.

3 விவசாயப் பொருளாதாரம் வைிடப்பட்டு ஏற்றுமதி, இறக்குமதி அடிப்படையிலான வர்த்தகப் பொருளாதாரம் தோன்றியது.

4 உலகெங்கும் முதலாளித்துவ பொருளாதாரம் வேகமாகப் பரவியது.

5 முயற்சியாளர்கள் ஒன்றிணைந்து தனித்தனி கூட்டு வர்த்தகக் கம்பனிகளை அமைத்தனர்.

6 வங்கிகள் தோற்றம் பெற்றன.

## 11 கைத்தொழிற் புரட்சியினால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை

### 1 நன்மைகள்

1 ஏராளமான வேலை வாய்ப்புக்கள் கிடைத்தன.

2 மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தமை 3 நகரங்கள் தோன்றியமை

4 தொழிலாளர் நரனோம்பல் முறை விருத்தியடைந்தமை

5 கொள்வனவுச் சக்தி அதிகரித்தது.

### 2 தீமைகள்

1 நகரங்களில் சனநெருக்கடி காரணமாக அடிப்படை வசதிகள் மிகக்குறைந்த வேகத்தில் வளர்ச்சயடைந்தமை.

2 செல்வந்தர், ஏழை என்ற வகுப்பு ரீதியான சமுக அமைப்பு தோன்றியது.

3 செல்வந்தர் ஆடம்பரமான வாழ்க்கை நடத்த உழைப்பவர்களின் வாழ்க்கை கவலைக்கிடமாக மாறியது.

4 தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வாழ்ந்தமையால் சேரிப்புறங்களில் வாழ்ந்த அவர்களின் சுகாதார வசதிகள் சரியாக கிட்டவில்லை.

5 ஒரே அறையில் ஒரு குடம்பம் வாழ்ந்தமையால் மதுகாவனையின் பயன்பாடு, தவறான செயல்களில் ஈடுபடல் போன்ற கலாசார சீரழிவுகளும் ஏற்பட்டன.

6 சூழல் மாசடைதல் ஏற்பட்டது.

7 பெண்கள், சிறுவர்கள் வசதி, பாதுகாப்பற்ற தொழிற்சாலைகளில் வேலை செய்தனர்.

## 12 இலங்கையில் கைத்தொழில் புரட்சியின் தாக்கங்கள் எவை?

### போக்குவரத்துத்துறை

1 1885இல் பெருந்தெருக்களை அமைக்கும் முறை தோன்றியது.

2 பாதைகளும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை

3 பொருட்களை கொண்டு செல்வதற்காக பெருந்தெருக்களும், புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டது.

4 ஆறுகளுக்கு குறுக்காக மரப்பாலம் அமைப்பதற்குப் பதிலாக இரும்புப்பாலம் அமைக்கப்பட்டது.

5 கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டது

6 ஆளுநர் எட்வேட்பாண்ஸ் காலத்தில் கொழும்பு – கண்டி பிரதான வீதி அமைக்கப்பட்டது.

7 ஆளுநார் ஹென்றிவோட் புகையிரத வீதிகளை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டடார்.

8 பின்வரும் புகையிரதப்பாதைகள் அமைக்கப்பட்ட ஆண்டுகள்

1863 – கண்டி – கொழும்பு

1871 – பேராதனை – நாவலப்பிட்டி

1899 – பேராதனை – பண்டாரவளை

**தொடர்பாடல் துறை**

1 1815இல் கொழும்பு, காலி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அரசாங்க தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

2 ஆசியாவில் குதிரை வண்டிகளைப் பயன்படுத்தி தபால் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

3 1857இல் தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

4 1858இல் தந்தி மூலம் செய்தி பரிமாறும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

**பெருந்தோட்டத்துறை**

1 1804இல் பிரெட்ரிக்நோத்தினால் கோப்பி விதைகளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

2 தேயிலைக் கொழுந்தை உலர்த்துதல் தொடக்கம் ஏற்றுமதிக்காகத் தரப்படுத்தல் வரை இயந்திர சாதனங்களால் மேற்கொள்ளப்பட்டமை.

3 இறப்பரை ஏற்றுமதிக்கு தயார்படுத்துவதற்காக இயந்திர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன.

## அலகு – 02

## இலங்கையில் பிரித்தானிய அதிகாரம் தாபிக்கப்படல்

### 01 பிரித்தானியரது கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கான காரணங்கள் எவை?

1 அமைவிட முக்கியத்துவம்

2 வர்த்தக முக்கியத்துவம்

3 திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்

### 02 இலங்கையைப் பிரித்தானியரின் குடியேற்ற நாடாக்குவதில் முனைப்பாகத் தெரியும் மூன்று சந்தர்ப்பங்களும் எவை?

1 1796இல் இலங்கையின் கரையோரப் பிரதேசம் முழுவதையும் ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினரால் கைப்பற்றப்பட்டது.

2 1802இல் முடிக்குரிய குடியேற்ற நடாக்கப்பட்டமை

3 1815ம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டமை

### 03 1797இல் கரையோரப்பிரதேசத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிக்கான காரணங்கள்

1 வரி அறவிடுவதற்கு அவுமில்தார்கள் நியமிக்கப்பட்டமை (இந்நாட்டின் கலாசாரம், மொழி, சம்பிரதாயங்கள் என்பனவற்றை அவர்கள் அறிந்திருக்காமை)

2 அவுமில்தார்கள் மக்களை கஷ்ரப்படுத்தி வரி அறவிட்டமை

3 பணப்புழக்கம் இல்லாத காலத்தில் பணமாக வரி அறவிடப்பட்டமையால் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியம்.

4 புதிய வரிகள் அறவிடப்பட்டமை (தென்னை வரி(10 தென்னை மரங்களுக்கு மேல் உள்ள காணிகளில் ஒரு தென்னைமரத்திற்கு ஒரு வெள்ளிக்காசு), கள்வரி, மீன்வரி, சாராயவரி, உப்புவரி)

## 04 இக்கலவரத்திற்கான காரணங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட மியுரன் குழுவின் சிபாரிசுகள் எவை?

1 வரிஏல விற்பனைமுறையை நீக்குதல்

2 வரி அறவிடுவதற்குச் சென்னை அதிகாரிகளுக்குப் பதிலாக உள்நாட்டவரை நியமித்தல்

3 புதிய வரிகள் நீக்கப்பட்டமை

4 ஒல்லாந்தரின் நீதிமன்ற முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துதல்

5 வரிவசூலிப்பதற்கும் நீதிவழங்குவதற்கும் வெவ்வேறான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல்

## 05 ஆளுநர் பிரெட்ரிக்நோத் கண்டி மீது படையெடுத்தமைக்கான காரணங்கள்

1 கரையோரமாகவும் கண்டி இராச்சிய எல்லையிலுமாக இரு படையணிகளை சேவையில் அமர்த்த வேண்டியிருந்தமை.

2 கண்டி இராச்சியத்துக்குள் பிரவேசிக்கும் கடவைகளில் வரி செலுத்த வேண்டியிருந்தமை.

3 கரையோர மக்களும் கண்டி மன்னனைத் தமது தலைவனாகக் கருதியமை.

4 பிலிமத்தலாவை மகா அதிகாரம் கண்டி அரசனாவதற்கு ஆங்கிலேயரின் உதவியை நாடியமை.

5 கரையோரப்பகுதிகளில் ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு கண்டி மன்னன் ஆதரவளித்தமை.

6 கண்டி மன்னன் பிரான்சியரின் உதவியை நாடுக்கூடும் என்ற அச்சம்.

7 நிர்வாகத் தலைமையமான கொழும்புக்கும் கடற்படைத் தலைமையகமான திருகோணமலைக்குமிடையே தரைப்பாதை அமைக்க கண்டி மன்னன் இணங்காமை.

## 06 நோத்தின் கண்டி மீதான படையெடுப்பு தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

1 கண்டி இயற்கை அரண்களைக் கொண்டிருந்தமை

2 மலையகத்திற்குள் நுழையும் பாதைகள் ஒற்றையடிப்பாதைகளாக இருந்தமை

3 கண்டி மன்னனின் யுத்த தந்திரம் அதாவது கெரில்லா தாக்குதல் காரணமாக ஆங்கிலேயருக்கு அதிக இழப்புக்கள் ஏற்பட்டமை

4 மலைநாட்டுச் சிங்களவரின் ஒற்றுமையும் அரச விசுவாசமும்

5 மழைக்காலம் ஆரம்பமானதால் ஆங்கிலேயப்படைகளிடையே நோய்கள் ஏற்பட்டமை

6 கரையோரப்பகுதிகளுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் உணவு, குடிபானங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டமை

7 கொழும்புடனான தகவல்தொடர்புகள் பாதிக்கப்பட்டமை

**07 1815இல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்ற முடிந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கும் பிரதம பிரதானி பிலிமத்தலாவைக்குமிடையிலான கருத்து வெறுபாடுகள்.

2 பிரதானிகளிடையே காணப்பட்ட பேதங்கள்

3 மன்னனுக்கும் பிக்குகளுக்குமிடையிலான நல்லுறவு பாதிக்கப்பட்டமை

4 மன்னன் மீது மக்கள் கொண்ட வெறுப்பு

5 ஜோன்டொயிலியின் செயற்பாடுகள்

**08 கண்டி உடன்படிக்கையின் முக்கிய வாசகங்கள் எவை?**

1 1 – 3 வாசகங்கள் - இராஜசிங்க மன்னனுக்கும் அவரனது உறவினர்களுக்கும் கண்டி சிம்மாசனத்தின் மீதிருந்த நகல உரிமைகளையும் நீக்கியது.

2 4வது வாசகம் - கண்டி இராச்சியம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதென்றும், பிரதானிகளின் உரிமைகளும் சலுகைகளும் பாதுகாக்கப்படும் வண்ணம் ஆட்சி நடைபெறும் எனவும் கூறப்பட்டது. புத்தசாசனமும் கிறிஸ்தவமும் பாதுகாக்கப்படும்.

3 ஏனைய வாசகங்கள் - கண்டி இராச்சிய நீதிமுறைகள்

**09 1818இல் இடம்பெற்ற முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள்**

1 சுதத்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமையும் பற்றிய மனவேதனை

2 சமய, கலாசார பாதுகாப்புத் தொர்பாக பிரச்சினைகள்

3 மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கம்

4 மடிகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டமை (உடனடிக் காரணம்)

**10 1818ம் ஆண்டு சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்**

1 ஆங்கிலேயர் கையாண்ட கடுமையான அடக்குமுறைக்கொள்கை

2 நீண்டகாலப் போராட்டத்திற்கு தேவைப்பட்ட ஆயுதங்களோ வளங்களோ கண்டியரிடம் காணப்படாமை

3 போராட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை

4 அரசனாகத் தோன்றிய நபர் அரசுரிமையற்ற போலியானவன் என்று தெரியவந்தமை

5 புனிததந்ததாது ஆங்கிலேயர் வசமானமை

6 உயர்குடி வர்க்கத்தினருக்கு இடையிலான தனிப்பட்ட குரோதங்கள்

**11 1வது சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்**

1 எல்லெபொல, கெப்பட்டிப்பொ, மடுகல்ல போன்ற தலைவர்கள் தமது உயிரைத் தியாகம் செய்தமை

2 பல பிரதானிகளின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன.

3 போராட்டத்தை ஆதரித்த தலைவர்கள் பலர் நாடு கடத்தப்பட்டனர்

4 ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்த மொல்லிகொட, எக்னெலிகொட போன்ற பிரதானிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டமை

**12 1848இல் இடம்பெற்ற 2வது சுதந்திரப்போராட்டத்திற்கான காரணங்கள் எவை?**

1 கோல்புறுக் சீர்திருத்தங்களின் செல்வாக்கு

2 அரசின் புதிய வரிக்கொள்கை

**13 2வது சுதந்திரப் போராட்டத்துக்குக் காரணமான கோல்புறுக் சிபாரிசுகள் எவை?**

1 அரசின் நிலக்கொள்கை

2 கிராமசபைகள் செயலற்றுப்போனமை

3 புதிய நீதிமன்ற முறைகள்

4 அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச்சென்றமை

**14 2வது சுதந்திரப் போராட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்**

1 போராட்டம் நன்கு முழுமையாக ஒழுங்குபடுத்தப்படாமை

2 இதில் பங்குபற்றிய பெருந்தொகையானோர் பொதுமக்களாவர் இவர்களுக்கு போதிய பயிற்சியோ ஆயுதங்களோ காணப்படாமை

3 மலைநாடு முழுவதும் சிறந்த பாதை வசதிகள் காணப்பட்டமை

4 ஆங்கிலேயரின் படை, ஆயுதம். கையாளும் முறைகளுக்கு எதிராக மக்களால் போராட முடியாமல் போனமை

5 மலைநாட்டின் சில பிரதேசங்களில் மட்டும் ஏற்பட்டமையால் இலகுவாக அடக்கிவிடக்கூடியதாக இருந்தமை

**15 2வது சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள் எவை?**

1 டொரிங்டன், குடியேற்ற செயலாளர் எமர்சன் டெனன்ற் என்போர் இங்கிலாந்திற்கு மீள அழைக்கப்பட்டமை

2 பொதுமக்களின் எதிர்ப்புக்கு உள்ளாகிய சில வரிகள் நீக்கப்பட்டமை – கடைவரி, நாய்வரி

3 சில வரிகள் மறுசீரமைக்கப்பட்டமை – முத்திரைவரி, துப்பாக்கிவரி, வண்டிவரி

4 விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையம் விருத்தி செய்வதற்கு அரசின் அனுசரணை வழங்கப்பட்டமை

5 குற்றவாளிகள் என நிருபிக்கப்பட்டோருக்கு தண்டனை வழங்கப்பட்டமையும், சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுத்தமையும்

6 பிரதேச மற்றும் மாகாண நிர்வாக நடவடிக்கைகளை மேம்படுத்துமாறு 1852ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை

## அலகு – 03

## இலங்கையில் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி

**01 மி'னரிகள் தமது சமயத்தைப் பரப்புவதற்கு கையாண்ட முறைகள் எவை?**

1 எழுத்து வழியாக

2 உரையாற்றுதல் வழியாக

3 கல்வி வழியாக

**02 பௌத்த சமய மறுமலர்ச்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை?**

1 மிஷனரிகளால் சிலை வணக்கம் கண்டிக்கப்பட்டமை

2 பௌத்த பழக்க வழக்கங்கள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டமை

3 சுயமொழிக்கல்விக்கு அரச அரனுசரணை கிடைக்காமை

4 தேசிய மொழிகளிலான கல்வியை எழுச்சி அடையச் செய்வதற்கான தேவை

**03 பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை?**

1 எழுத்து வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல்

2 உரையாற்றுதல் வழியாக சமயம் பரப்புதல் ஆரம்பிக்கப்படல்

3 கல்வி வழியாக சமயம் பரப்பும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படல்

**04 பின்வருவோர் தமது சமய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விளக்குக.**

**பௌத்த மதம்**

1 ஹென்றி ஸ்டில் ஒல்கொட்

2 மீகெட்டுவத்த குணானந்ததேரர்

3 ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்

**இந்து மதம்**

1 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

2 சேர்.பொன்.இராமநாதன்

**இஸ்லாம் மதம்**

1 அறிஞர் சித்திலெப்பை

2 டி.பி.ஜாயா

**05 தேசப்பற்றை வளர்க்கும் இயக்கத்துக்கு பங்களிப்புச் செய்தவர்களையும் அவர்களது பங்களிப்புக்களையும் குறிப்பிடுக.**

1 அநகாரிக தர்மபால

2 பியதாச சிறிசென

3 வலிசிங்க ஹரிச்சந்திர

**06 மது ஒழிப்பு இயக்கத்துக்காக பாடுபட்ட தலைவர்கள் யாவர்?**

1 அநகாரிக தர்மபால – பத்திரகை மூலமும், சொற்பொழிவு மூலமும் இதனை மேற்கொண்டார்.

2 பியதாச சிறிசென – தமது புனைகதைகளில் பல்வேறு பாத்திரங்களை உருவாக்கி மதுபானம் அருந்துவதன் தீயவிளைவுகளைக் கூறினார்.

3 ஜோன் த சில்வா – நாடகங்கள் மூலம் எடுத்துக்காட்டினார். பராபவ என்ற சிங்கள நாடகத்தின் மூலம் இதனை வெளிப்படுத்தினார்.

# அலகு – 04

## பிரித்தானியரின் ஆட்சியில் இலங்கையின் அரசியல் மாற்றங்கள்

### 01 கோல்புறுக் யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

**அரசியல் சிபரிசுகள்**

1 சட்டவாக்கக்கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பன அமைக்கப்பட்டது.

2 மலைநாடும், கரையோரப்பிரதேசமும் இணைக்கப்பட்டு ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

3 நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை

4 ஆங்கிலம் போதனா மொழியாக்கப்பட்டமை

**பொருளாதார சிபாரிசுகள்**

5 கட்டாய இராஜகாரிய முறை நீக்கப்பட்டமை

6 அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டது

7 காணி விற்பனைச் சட்டம் கொண்டு வரப்பட்டமை

### 02 மது ஒழிப்பு இயக்கத்தின் பண்புகள் எவை?

1 அரசாங்கத்தின் மதுவரிக்கொள்கைக்கு எதிராகப் பொது மக்களின் அபிப்பிராயத்தை உருவாக்க முயற்சித்தமை

2 மத்தியதர வர்க்கத்தினரான ஆங்கிலம் கற்றவர்களும், சமய, கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தினரும் ஒரே கொள்கை அடிப்படையில் செயற்பட்டமை

3 மது ஒழிப்பு இயக்க மேடைகளில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டமை

### 03 டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள் எவை?

1 அரசுக்கழகம் அமைக்கப்பட்டமை

2 நிர்வாகக்குழுமுறை

3 சர்வசன வாக்குரிமை

4 ஆளுநரும் அரச அதிகாரிகளும்

# அலகு – 05

## பிரித்தானியரின் கீழ் இலங்கையின் சமூக பொருளாதார மாற்றங்கள்

### 01 இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக மாறியபோது காணப்பட்ட சமூகத்தின் இயல்புகள் எவை?

1 உயர்ந்த பிரபுத்துவ வகுப்பொன்று காணப்பட்டது.

2 நாட்டின் பெருந்தொகையான மக்கள் சாதாரண குடிமக்களாகக் காணப்பட்டனர்.

3 மக்களது வாழ்க்கை கிராமத்தை அடிப்படையாகக் கொண்டமைந்தது.

4 பரஸ்பரம் உதவி புரியும் சமாதான சக வாழ்வு காணப்பட்டது.

5 கிராமசபைகளால் மக்களின் சிறிய பிரச்சினைகள் விசாரித்து தீர்க்கப்பட்டது.

### 02 கோல்புறுக் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் எவை?

1 காணி விற்பனைக் கொள்கை அறிமுகஞ் செய்யப்பட்டமை

2 ஊழியர்களை தடங்கலின்றி பெற்றுக்கொடுக்க வழி ஏற்படுத்தியமை

3 அரசின் வியாபார ஏகாதிபத்தியம் இரத்துச் செய்யப்பட்டமை

4 வரி அறிவீட்டு மாற்றம்

5 சேமிப்பு வங்கியை ஆரம்பித்தல்

### 03 கோப்பிச் செய்கையின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

1 வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவில் கோப்பித் தொட்டங்களில் முதலீடு செய்தமை

2 ஐரோப்பிய சந்தையில் கோப்பிக்கான கேள்வி அதிகரித்தமை

3 கோப்பிசெய்கை மூலம் அதிக இலாபம் கிடைத்தமை

4 தென்னிந்திய ஊழியர்கள் மூலம் குறைந்த கூலிக்கு உழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டமை

### 04 கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 பிரித்தானிய சந்தையில் இலங்கைக் கோப்பிக்கு இருந்த கடும் போட்டி

2 1848இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சி

3 1869இல் கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட ஹெமிலியா வெஸ்டாக்ஸ் என்னும்இலை வெளிறல் நோய்

### 05 தேயிலையின் விருத்தியில் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?

1 இலங்கைத் தேயிலைக்கு உலக சந்தையில் சிறந்த கேள்வி நிலவியமை

2 உலர் வலயம் தவிர இலங்கையின் ஏனைய பிரதேசங்கள் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டமை

3 பெருந்தெருக்கள், புகையிரத வீதிகள் காரணமாக போக்குவரத்து வசதிகள் மேலும் முன்னேற்றமடைந்தமை

4 குறைந்த கூலிக்கு உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டமை

**06 இறப்பர் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தமைக்கான காரணங்கள் எவை?**

1 இலங்கைக்குப் பொருத்தமான இறப்பர் இனத்தை அறிந்து அதற்குப் பொருத்தமான தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தியமை

2 தேயிலை விலை தற்காலியமாக வீழ்ச்சி கண்டமை

3 முதலாம் உலகப்போரின் போது இறப்பரின் விலை அதிகரித்தமை

**07 பிரித்தானியர் அறிமுகப்படுத்திய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட சாதாக பாதக விளைவுகளைக் குறிப்பிடுக.**

**சாதக விளைவுகள்**

1 பொருளாதார முறையானது பெருந்தோட்டத்துறையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரமாக மாறியது.

2 பெருந்தோட்டப்பயிர்ச்செய்கை காரணமாக கண்டி, பதுளை உட்பட நாட்டின் ஏனைய பிரதேசங்களைத் தொடுக்கும் பெருந்தெருக்களும்,புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டமை

3 செய்திப் பரிமாற்ற நடவடிக்கைகள், தொடர்பாடல் துறைகள் விருத்தியடைந்தமை உதாரணமாக அஞ்சற் சேவை ஆரம்பிக்கப்பட்டமை

4 புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டதுடன் புதிய நகரங்கள் தோன்றின

5 அரசினது பிரதான வருமான மார்க்கமாகப் பெருந்தோட்டத்துறை விளங்கியது.

**பாதக விளைவுகள்**

1 பெருந்தோட்டத்துறையின் வளர்ச்சி காரணமாக இந்நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரம் சீர்குலைந்து ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரம் ஏற்பட்டது.

2 கண்டி மக்கள் விவசாய நிலங்களை இழந்தனர்.

3 மலையகத் தமிழர் பிரச்சினை தோன்றியது.

4 அரிசிக்குக்கூட வெளிநாட்டில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டமை

5 கைத்தொழிற்துறை கவனியாது விடப்பட்டமை

**08 பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட சமுக மாற்றங்கள் எவை?**

1 பண்டைய உயர்குடி வகுப்பு தேய்வுற்றமையும் புதிய மத்தியதர வகுப்பு உருவாகியமையும்

2 ஆங்கிலக்கல்வி காரணமாக ஐரோப்பியப் பண்பாட்டை மதிக்கும், மேல் நாட்டவருக்குச் சார்பான ஒரு தொகுதிச் சுதேசிகள் உருவாகியமை.

3 தொழிலாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை

**09 இலங்கையில் மேலைத்தேயக் கலாசாரம் பரவக் காரணங்கள் எவை?**

1 கோல்புறுக் யாப்பின் ஆங்கில மொழி மூலமான மெவைத்தேயக் கல்வி முறை வேகமாகப் பரவியமை

2 மிசனரிப் பாடசாலைகளிலும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளிலும் செயற்படுத்தப்பட்ட கற்பித்தல் நடவடிக்கை மூலமாக மேலைத்தெசக் கலாசாரம் பரவியது.

3 உயர் கல்விக்காக வெளிநாடு சென்று வந்தவர்களாலும் மேலைத்தெயக் கலாசாரம் பரவியது.

4 ஐரோப்பியரின் அதிகரித்த வருகைக்காக ஏற்படுத்தப்பட்ட விடுமுறைக்கால விடுதிகள் மற்றும் இரவுக் களியாட்ட விடுதிகள் மூலமாக

**10 பிரித்தானிய ஆட்சியின் மூலமாகப் பெற்றுக்கொண்ட பயன்மிக்க அம்சங்கள் எவை?**

1 ஆங்கிலமொழி, அங்கிலக்கல்வி பெற வாய்ப்புக்கள் கிடைத்தமை

2 போக்குவரத்து, செய்திப் பரிமாற்றம் என்பன விருத்தியடைந்தமை

3 பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சியின் செல்வாக்கு இலங்கையிலும் பரவியது.

4 சிறு கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டமை.

5 ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப்பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டமை.

6 பாராளுமன்ற ஆட்சி மறை உருவானமை.

**11 பிரித்தானியர் ஆட்சியால் ஏற்பட்ட பாதகமான அம்சங்கள் எவை?**

1 மேலைத்தேயக் கலாசாரத்தின் பரவல் காரணமாக உள்நாட்டுக் கலாசாரம் பாரம்பரியம் சீர்குலைந்தமை.

2 மதுபானப் பாவனை நாடெங்கும் பரவியமை

3 காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை

4 மரபு ரீதியான தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததுடன் தேசிய ரீதியான அறிவும் ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டமை

5 கிராமசபை போன்ற பயனுள்ள அமைப்புக்கள் அழிவுற்றமை

# அலகு – 06

## இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தல்

### 01 சோல்பரி யாப்பின் முக்கிய இயல்புகள் எவை?

1 ஆளுநர் நாயகம்

2 இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம்

3 பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

4 நீதிச் செயற்பாடுகள்

### 02 அரசியல் கட்சிகளின் முக்கியத்துவங்கள் எவை?

1 பாராளுமன்ற ஜனநாயகம் காணப்படும் எல்லா நாடுகளிலும் காணப்பட வேண்டிய பண்பாகும்.

2 அவ்வவ் கட்சிகளின் கொள்கை அடிப்படையில் மக்களை ஒன்று திரட்டுவதற்கு

3 அரசியல் வாதிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையிலான உறவைக் கட்டியெழுப்புவதற்கு

4 கட்சியின் கொள்கைகளை மக்கள் முன் கொண்டு செல்வதற்கு

### 03 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பின்

1 இதுவரை லங்கா என அழைக்கப்பட்ட இந்நாடு ஸ்ரீலங்கா என அழைக்கப்படல்.

2 பிரித்தானியப் பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்பகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.

3 இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்.

4 மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.

### 04 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?

1 பெயரளவு ஜனாதிபதிப் பதவி

2 தேசிய அரசுப்பேரவை

3 அடிப்படை மனித உரிமைகள்

4 பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

5 நீதிமன்றங்கள்

**05 இரண்டாம் குடியரசு யாப்பின் அடிப்படை அம்சங்கள் எவை?**

1 இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்படும்

2 அது ஒற்றையாட்சி நாடாகக் காணப்படும்

3 மக்களிடம் உள்ள சட்டத்தறை அதிகாரம், சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளாலும், பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் பொதுமக்களினாலும் மக்களின் இறைமை வெளிப்படுத்தப்படும்.

4 பொதுமக்களின் நிறைவேற்றதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதியால் நிறைவேற்றப்படும்.

5 பொதுமக்களின் நீதிமன்ற அதிகாரங்கள் யாப்பின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்றத் தொகுதியால் செயற்படுத்தப்படும்.

**06 இரண்டாம் குடிரயசு யாப்பின் முக்கிய சீர்திருத்தங்கள் எவை?**

1 நிறைவேற்று ஜனாதிபதி

2 பாராளுமன்றம்

3 நீதிமன்றம்

4 பிரதமரும் அமைச்சரவையும்

5 அடிப்படை உரிமைகள்

**07 1978இல் உருவாக்கப்பட்டுள்ள வாக்களிப்பு முறைகள் எவை?**

1 ஜனாதிபதித் தேர்தல்

2 விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல்

3 பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

**08 உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதற்கான நோக்கங்கள் / காரணங்கள் எவை?**

1 ஈரவலயத்தில் பெருகிச் செல்லும் சனத்தொகை நெருக்கடிக்குத் தீர்வு காணல்

2 உணவு உற்பத்தியைப் பெருக்கதல்

3 வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்

4 உலர் வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்கள் என்பவற்றைப் புனரமைத்து அங்குள்ள நிலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல்

5 ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு பரிகாரம் காணுதல்.

**09 புதிய விவசாயக் குடியேற்றங்களை உருவாக்கும் போது அரசாங்கம் எதிர்நோக்கிய சவால்கள் எவை?**

1 ஈரவலயத்திலிருந்து தெரிவுசெய்த மக்களுக்கு உலர் வலயத்தில் நிலங்களை வழங்கி வீடமைத்துக் குடியேற்றுதல்.

2 நீண்ட காலமாகக் காடாகிக் கிடந்த நிலத்தை விவசாயத்திற்கு உகந்ததாக மாற்றியமைத்தல்

3 அப்பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துதல்

4 முதலாவது அறுவடையைப் பெற்றுக்கொள்ளும் வரை உதவி நிதியை வழங்குதல்

5 பொது மக்களுடைய சுகாதாரம், கல்வி உட்பட ஏகைய வசதிகளை மேம்பாடடையச் செய்தல்.

**10 மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எவை?**

1 உலர் வலயக் காணிகளைக் கூடிய பயன்பாட்டுடன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர்வசதியை வழங்குதல்

2 அதிகரித்துச்செல்லும் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வண்ணம் மின் உற்பத்தியை மேற்கொள்ளல்

3 நீர் வளத்தின் மூலம் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற விவசாயிகளுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுத்து பயிர்ச்செய்கையைப் பரவலடையச் செய்தல்

4 விவசாயத்துறைத் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்

5 வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்துதல்

6 நன்னீர் மீன் வளர்ப்பை விருத்தியடையச் செய்தல்.

**11 நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கைகள்**

1 1948இல் நெல்லுக்கு உத்தரவாத விலை அறிமுகப்படுத்தப்படல்.

2 ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்குதல், புதிய நெல் இனங்களை அறிமுகப்படுத்ததல்

3 விவசாய சேவை மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்

4 அரசாங்க வங்கிகள் மூலம் விசாயிகளுக்க கடன் வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.

**12 சுதந்திரத்தின் பின்னர் வர்த்தக விவசாயத்தை முன்னேற்றுவதற்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?**

1 1972ம் ஆண்டின் நிலச்சீர்திருத்தச்சட்டம் - நபர் ஒருவர் வைத்திருக்கக்கூடிய நிலத்தின் அளவு வரையறுக்கப்பட்டது.

2 1975ம் ஆண்டின் நிலச்சீர்திருத்தம் - வர்த்தகப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த கம்பனிகளுக்கு உடமையாக இருந்த காணிகள் பொது உடமையாக்கப்பட்டன.

3 1952 இல் சீன - இலங்கை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் மூலம் இலங்கையின் இறப்பருக்கு நிரந்தரமான சந்தை ஒன்று கிடைத்தமை

4 1977ஆம் இறப்பர் மீள்நடுகைக்கும் புதிய நடுகைக்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கு உதவி புரியும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**13 சிறுஏற்றுமதிப் பயிர்களின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?**

1 1968ம் ஆண்டு தேயிலைப் பயிர் செய்யும் நிலங்களிவ் சிறுஏற்றுமதிப் பயிர்செய்கையை மேற்கொள்ளுதல்

2 1972ம் ஆண்டு மாத்தளையில் சிறுஏற்றமதிப் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டது. பின்னர் குண்டசாலை, தெல்பிட்டி, நாரம்மலை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன.

**14 1960ஆம் ஆண்டின் பின்னர் கைத்தொழில் துறையின் பண்புகள் எவை?**

1 1961ம் ஆண்டு மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதுடன் சிறு கைத்தொழிலாளருக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

2 1966இல் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நிர்ணயிப்பதற்காகத் தரநிர்ணய சபை ஆரம்பிக்கப்பட்டமை.

3 அரசின் கைத்தொழில் கொள்கையால் 1960இன் பின்னர் இந்நாட்டிற்குத் தேவையான நுகர்வுப் பொருள் உற்பத்தியில் வளர்ச்சி ஏற்பட்டது.

4 1970 – 1977 காலகட்டத்தில் அரசு கடைப்பிடித்த பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கையில் குடிசை, அலகு கைத்தொழில் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டன.

**15 1948ம் ஆண்டின் பின்னர் கல்விப் புலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?**

1 அரசாங்கப் பாடசாலைகளை அமைத்தல், கல்விக்கு அதிக பணம் ஒதுக்குதல்

2 பாடத்திட்டத்தை விருத்தியடையச் செய்து ஆசிரிய பயிற்சி நடவடிக்கைகள் நவீன மயப்படுத்தப்பட்டன.

3 விஞ்ஞான ஆய்வுகூட, நூல் நிலைய வசதிகள் விரிவாக்கப்பட்டன.

4 இலவச பகலுணவு, வைத்தியம், பல்வைத்தியம், சலுகை அடிப்படையிலான போக்குவரத்துக் கட்டணங்கள், இலவசப்பாடநூல், இலவச சீருடை என்பவற்றைப் பெற்றுக் கொடுத்தல்

5 தொழினுட்பக் கல்வித்தாபனங்கள் உருவாக்கப்பட்டமை

**16 உயர் கல்விக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை?**

1 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தை கொழும்பில் ஆரம்பித்தமை

2 1952இல் அதனைப் பேராதனைக்கு இடமாற்றியமை

3 வித்தியோதயபிரிவெனாவும், வித்தியலங்கார பிரிவெனாவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களனி பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்தப்பட்டமை

4 1972இல் மொரட்டுவ – கட்டுப்பெத்த கல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டமை

5 1974இல் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டமை

**17 சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட சமுகநலனோம்பல்களை பின்வரும் தலைப்புக்களில் விளக்குக.**

1 கல்வி

2 சுகாதாரம்

3 போக்குவரத்து

4 நீர் விநியோகம்

5 மின்சாரம்

6 செய்தித்தொடர்பு

# அலகு – 07

## உலகில் இடம்பெற்ற பிரதான புரட்சிகள்

### 01 அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைத்தமைக்கான காரணங்கள் எவை?

1 ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மோதலினால் சமய சுதந்திரத்தை எதிர்பார்த்து மக்கள் பதிய இடங்களுக்குச் செல்ல விரும்பியமை.

2 வர்த்தகத்தின் பொருட்டு பதிய பிரதெசங்களில் நிலங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் வாழ்வை சிறப்பானதாக்கிக் கொள்ள மக்கள் விரும்பியமை

3 புகழையும் செல்வத்தையும் அதிகரிக்கும் நோக்குடன், ஐரோப்யி நாடுகளின் ஆட்சியாளர்கள் புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு வழங்கிய ஒத்துழைப்பு

### 02 பிரித்தானியரால் அமெரிக்காவில் கடைப்பிடிக்கப்பட்ட பொருளதாரக் கொள்கைகள் எவை?

1 பிரித்தானியாவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் குடியேற்றங்களில் உற்பத்தி செய்வது தடைசெய்யப்பட்டது

2 புகையிலை, சீனி, பருத்தி, தேன், மெழுகு, கோதுமை, வெண்கலம் போன்ற பொருட்கள் பிரித்தானியாவுக்கு மாத்திரமே கொடுக்கப்படல் வேண்டும்.

3 இவை தவிர்ந்த ஏனைய பொருட்களை பிரித்தானியாவுக்கு அனுப்பியே ஏனைய நாடுகளுக்கு அனுப்பதல் வேண்டும்.

4 குடியேற்ற நாடுகள் உற்பத்தி அல்லது வர்த்தகம் தொடர்பாக தாய் நாட்டுடன் போட்டியிட முடியாது

### 03 அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்கள் எவை?

1 பிரிதானியப் பாராளுமன்றத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பதிய வரிகள் (முத்திரை வரி, தேயிலை வரி, கண்ணாடி வரி, , கடதாசி வரி)

2 அமெரிக்க குடியேற்றவாசிகள் நீண்ட காலமாகப் பிரித்தானிய தலையீட்டிற்கு மாறாக சுய நிர்வாகத்திற்குப் பழக்கப்பட்டிருந்தமை

3 பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டிற்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கை

4 குடியேற்றவாசிகளின் நீதியான போராட்டங்களைக் கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை

எடுத்தமை

**04 அமெரிக்க சுதந்திரப்போரின் விளைவுகள் எவை?**

1 ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்ற சுதந்திர அரசு தோன்றியது

2 முழு மனித குலத்திற்கும் சுதந்திரத்தின் மேன்மையை எடுத்துக்காட்டிய சந்தர்ப்பமாக அது அமைந்தது

3 அடிப்படை மனித உரிமைகள் பற்றிய உணர்வு உலகம் முழுவதும் ஏற்பட்டது

4 அனைத்து இனத்தவரும் சமமானவர் என்ற பதம் பிற்காலத்தில் உலகில் இடம்பெற்ற புரட்சிகளின் தலைப்பாக அமைந்தது.

5 முதலாவது எழுத்து மூல கூட்டு அரசியல் யாப்புத் தோன்றியது.

**05 பிரான்சியப் புரட்சிக்கான அரசியல் காரணங்கள் எவை?**

1 மன்னர்கள் தமது அரசுரிமையை கடவுள் தந்த ஒரு வரமாகக் கருதியமை

2 மன்னன் கொண்டிருந்த வரையறையற்ற அதிகாரங்கள்

3 மன்னன் அனுபவித்த சுகபோக வாழ்வு

4 எதிரிகளை மடக்குவதற்கு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தல்

5 ஊழல் நிறைந்த முடியாட்சி

**06 பிரான்சில் பிரபுக்களும், குருமார்களும் அனுபவித்த சலுகைகள் எவை?**

1 நாட்டின் எந்த இடத்திலும் மீன் பிடிக்கவும் வேட்டையாடவும் உரிமை

2 பிரபுக்களுக்குச் சொந்தமான தானிய ஆலைகள், வைன், வடிசாலைகள், வெதுப்பகங்கள் போன்றவற்றில் விவசாயிகள் தமது தேவையை நிறைவு செய்ய வேண்டியிருந்ததுடன் இதன் பொருட்டு அதிக பணம் செலுத்த வேண்டியிருந்தது.

3 விவசாயிகளின் நிலங்களிலிருந்து வரி அறவிடும் உரிமை

4 அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரிகளிலிலிருந்து விலக்குப்பெறல்

## 07 பிரான்சியப் புரட்சிக்கான சமூகக் காரணிகள் எவை?

1 புரட்சியின் போது காணப்பட்ட மானியமுறை. புரந்த நிலப்பரப்பைக் உரிமையாக்கிக் கொண்டிருந்த பிரபுக்களின் தலைமையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட முடியாட்சி முறையாகும்.

2 குருமார்களும், பிரபுக்களும் அனுபவித்த சலுகைகள்

3 மொத்தச் சனத்தொகையில் சிறுபான்மையினராக இருந்தாலும் பிரபுக்களும், குருமார்களும் செல்வந்தர்களாகக் காணப்பட்டமை

4 மத்திய வகுப்பினர் வர்த்தகத்தில் ஈடுப்பட்டு செல்வந்தர்களாக விளங்கினும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறாமை

5 கல்வியில் முன்னின்ற மத்திய வகுப்பினருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.

6 விவசாயிகளுக்கு கடினமாக உழைக்கும் உரிமை இருந்த போதிலும் பிரபுக்களுக்குச் செலுத்திய வரிச்சுமையால் அவர்களது வாழ்க்கை கடினமானது.

## 08 பிரான்சியப் புரட்சிக்கான பொருளதாரக் காரணிகள் எவை?

1 பிரான்சின் திறைசேரி வெறுமை நிலையை அடைந்தமை

2 பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த அதிக வரிச்சுமை

## 09 பிரான்சியப் புரட்சியின் விளைவுகள் எவை?

1 1791ம் ஆண்டு அடிப்படை உரிமைகள் தொடர்பாக சாசனம் வெளியிடப்பட்டமை

2 பிரான்சின் முடியாட்சி வீழ்ச்சியுற்றமை

3 பிரான்சின் விவசாயத் தொழிலாள மக்களுக்குச் சலுகை கிடைத்தமை

4 பிரான்சில் உறுதியற்ற அரசியல் முறை தோன்றியமை

## 10 ரஸ்யப்புரட்சிக்கான காரணங்கள் எவை?

1 ரஸ்யாவில் காணப்பட்ட ஊழல் நிறைந்த சர்வாதிகார முடியாட்சி –

2 ஊழல் நிறைந்த நிலமானிய சமூக முறை

3 ஜப்பானுடனான யுத்தத்தில் தோல்வியடைந்தமை

4 முதலாம் உலகப்போரின் போது விவசாயிகளைப் போர்வீரர்களாகச் சேர்த்தமையால் ஏற்பட்ட நெருக்கடிகள்

## 11 ரஸ்யப் புரட்சியின் விளைவுகள் எவை?

1 கெரன்ஸ்கி தலைமையிலான அரசைக் கவிழ்த்து லெனின் தலைமையிலான போல்ஸெவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றியமை.

2 நாட்டில் சமாதானம் உருவானது

3 தனியார் காணி உரிமை நீக்கப்பட்டு கூட்டுப்பண்ணை முறை ஆரம்பிக்கப்பட்டமை

4 சார் மன்னரிகளின் ஆட்சியை முற்றிலும் ஒழித்து அதற்குப் பதிலாக தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியற்சபையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

5 சோவியத் சமவுடமைக் குடியரசு என அழைக்கப்பட்டது

6 பொதுவுடமைத் தத்துவம் உலகெங்கும் பரவியமை

7 பாட்டாளி வகுப்பினரின் புரட்சிகள் உலகெங்கும் பரவியமை

8 ரஸ்யாவை மையமாகக் கொண்ட சமவுடமைவாத அணி தோற்றம் பெற்றது.

## 12 சமவுடமைக் கொள்கையின் இயல்புகள் எவை?

1 தனிநபர் தேவையை விட சமூக முன்னேற்றத்திற்கும் சமூகத் தேவைகளுக்கும் முன்னுரிமை வழங்குதல்.

2 சமுதாயத்தில் அநீதிகளையம் ஏற்றத்தாழ்வினையும் அகற்றுதல்

3 சமுதாயத்தில் வகுப்புப் பாகுபாடுகளை அகற்றி அனைவரையும் சகோதரர்களாக எண்ணும் உயர் மானிட சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

# அலகு – 08

## உலக மகா யுத்தங்களும் இணக்கப்பாடுகளும்

### 1 முதலாம் உலக யுத்தம் இடம்பெற்றமைக்கான காரணங்கள் எவை?

1 ஜேர்மனியை ஐக்கியப்படுத்தும் நடவடிக்கையின் போது பிரான்சும் ஜேர்மனியும் பகைமை நாடுகளாக உருவெடுத்தமை

2 ஜேர்மன் பேரரசனாகிய இரண்டாம் வில்லியத்தின் செயற்பாடுகள்

3 குடியேற்றங்கள் குறித்த போட்டி

4 ஆயுதப் போட்டிகளும் இனவாதம் வளர்ச்சியடைதலும்

5 பிரான்சை தனிமைப்படுத்துவதற்குப் பிஸ்மார்க் பின்பற்றிய வெளிநாட்டுக்கொள்கை

6 ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசனின் கொலை

### 2 முதலாம் உலகப்போரில் ஜேர்மனி தலைமையிலான மத்திய ஐரோப்பிய வல்லரசுகள் அணி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 ஐக்கிய அமெரிக்கா நட்பு நாடுகள் அணிக்கு சார்பாக போரில் இணைந்தமை

2 ஐக்கிய அமெரிக்காவிடம் காணப்பட்ட பெருந்தொகையான உணவுக்கையிருப்பு, இரு மில்லியனைக்கொண்ட காலாட்படை, மற்றும் கடற்படை, புத்தம் புதிய நவீன போர் ஆயுதங்கள் என்பவற்றால் ஏற்பட்ட நெருக்கடி

3 இரகசிய ஒப்பந்தம் மூலம் இத்தாலி நட்பு நாடுகள் பக்கம் சேர்ந்தமையால் போர் இரகசியங்கள் எதிரியின் கைகளுக்குச் சென்றமை

4 ஜேர்மனியின் போரிடும் சக்தி பலவீனமடைந்தமை, உணவு நெருக்கடி ஏற்பட்டமை, இராணுவத்தின் மத்தியில் ஏற்பட்ட அமைதியின்மை ஏற்படுத்தியது.

5 ஜேர்மனியில் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டு கலவரங்கள் நாடு முழுவதும் பரவியமை.

### 3 முதலாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள் எவை?

1 யுத்தத்தில் அச்சு நாடுகள் அணி தோல்வியடைந்தமை

2 யுத்தத்தில் நட்பு நாடுகள் அணி வெற்றி பெற்றமை

3 ஆயுதப்பாவனை காரணமாக பெருந்தொகையான மனித உயிர்கள் கொல்லப்பட்டதோடு பத்து இலட்சம் மக்கள் ஊனமுற்றனர்.

4 பெருமளவான சொத்துக்கள் அழிவடைந்தன.

5 போரின் முடிவில் தோல்வியடைந்த நாடுகளுடன் வெற்றியடைந்த நாடுகள் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது.

6 உலகின் விலமை மிக்க நாடுகளாக பிரித்தானியாவும், ஐக்கிய அமெரிக்காவும் எழுச்சி பெற்றமை

7 சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டமை

**4 வேர்செயில்ஸ் உடன்படிக்கை மூலம் ஜேர்மனிக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் எவை?**

1 வெற்றி பெற்ற நாடுகளுக்கு பெருந்தொகையான பணத்தை நட்ட ஈடாக செலுத்த வேண்டும்

2 இராணுவத்தை வைத்துக்கொள்ளல், பொர்த் தளபாடங்களை தயாரிக்க விடயத்தில் வரையறைகள் விதிக்கப்பட்டன.

3 பிரான்சிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களான அல்சேஸ், லொரைன்ஸ் பிரதேசங்கள் மீண்டும் பிரான்சிடம் ஒப்படைக்கப்படல்

4 ஜேர்மனிக்கு வெளியே அமைந்திருந்த அதன் குடியேற்ற நாடுகள் வெற்றி பெற்ற நாடுகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன.

**05 சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?**

1 நாடுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை சமாதானமாகத் தீர்த்தல்

2 எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தடுத்தல்

3 சர்வதேச புரிந்துணர்வையம் ஒத்துழைப்பையும் கடடியெழப்புதல்

4 சிறிய நாடுகளின் சுதந்திரம், சுயாதீனம் என்பவற்றைப் பாதகாத்தல்

5 மனித குல ஒற்றுமை மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்

**06 சர்வதேச சங்கம் சமாதானத்தைப் பாதுகாக்க எடுத்த முயற்சிகள் எவை?**

1 சுவீடனுக்கும் பின்லாந்துக்கும் இடையிலும், ஜேர்மனிக்கும் போலந்திற்கும் இடையிலும், கிரேக்கத்திற்கும் பல்கேரியாவுற்கும் இடையிலும் , ஈரானுக்கும் துருக்கிக்கும் இடையிலும் ஏற்பட்ட யுத்த முரண்பாடுகளை தவிர்த்தமை

2 அகதிகள் புனர்வாழ்விற்காக நடவடிக்கையெடுத்தமை

3 சர்வதேச சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த குடியேற்றங்களின் ஆட்சி நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்பார்வை செய்தமை

4 சட்ட விரோமான அடிமை வியாபாரம், போதைப் பொருள் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தல்

## 7 சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 உலகின் செல்வந்த நாடாகவும், பொர்ப்பலமிக்க நாடாகவும், சர்வதேச சங்கத்தின் தோற்றத்திற்கும் காரணமான ஐக்கிய அமெரிக்கா அங்கம் வகிக்காமை.

2 உலகின் மற்றைய வல்லரசான ரஸ்யாவை சர்வதேச சங்கத்திலிருந்து ஒதுக்கி வைத்தமை

3 தனது தீர்மானங்களை நிர்ப்பந்தம் மூலம் செயற்படுத்துவதற்குத் தேவையான நிரந்தரப்படையோ அல்லது ஏதாவதொரு சமாதமானப் படையை பயன்படுத்துவதற்கான பொது இணக்கப்பாடோ காணப்படாமை

4 உலக சமாதானம் சீர்குலைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியமாலிருந்தமை. உதாரணமாக இத்தாலி அபிசீனியாவை ஆக்கிரமித்த போதும், ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்த போதும் நடவடிக்கையெடுக்க முடியவில்லை.

## 8 இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கான காரணிகள் எவை?

1 ஜேர்மனியில் ஹிட்லரின் எழுச்சியும் அவரின் நடவடிக்கைகளும்

2 இத்தாலியில் முசோலினியின் நடவடிக்கை

3 ஜப்பானின் நடவடிக்கைகள்

4 சர்வதேச சங்கத்தின் பலவீனம்

## 9 ரஷ்யாவில் ஜேர்மனி தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் எவை?

1 ரஷ்யப்படையினரின் தந்திரங்கள்

2 கடும் குளிரால் தகவல் பரிமாற்றம் செயலிழந்தமை

3 பனி வீழ்ச்சி காரணமாக யுத்த தாங்கிகள் செயலிழந்தமை

4 குளிரால் போர் வீரர்கள் இறந்தமை

5 உணவுத்தட்டுப்பாடு, நோய்கள் பரவியமை

## 10 இரண்டாம் உலக மகா யுத்தத்தின் விளைவுகள் எவை?

1 ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சு நாடுகள் தோல்வியடைந்தன.

2 இந்த யுத்தத்தில் 50 மில்லியனுக்கம் அதிகமான மனித உயிர்கள் கொல்லப்பட்டதோடு சொத்துக்கள் மற்றும் செல்வங்களின் அழிவு கணக்கிடமுடியாதவையாக இருந்தன.

3 ஹிட்லரின் யூதர்களுக்கு எதிரான கொள்கை காரணமாக ஜேர்மனி, போலந்து, ஹங்கேரி போன்ற நாடுகளில் வாழ்ந்த மில்லியன் கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டனர்.

4 அணுகுண்டு போராயதமாக முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது.

5 அமெரிக்காவும், ரஸ்யாவும் புதிய உலக வல்லரசுகளாக எழுச்சி பெற்றமை.

6 இலங்கை, இந்தியா போன்ற குடியேற்ற நாடுகள் சுதந்திரமடைந்தன.

7 போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளைக் கட்டியெழுப்ப அமெரிக்க அரச செயலாளர் ஜோன்மார்சல் என்பவரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

8 அமெரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவலனாகவும், ரஸ்யா சமவடைமையின் பாதுகாவலனாகவும் மாறியதோடு இரு நாடுகள் தலைமையில் இரு அணிகள் தோன்றின.

## 11 ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டமைக்கான காரணங்கள் எவை?

1 சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிவருதல்

2 நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்

3 மனித மற்றும் அடிப்படை சுதந்திரத்தை உறுதிசெய்து சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல்

## 12 ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பினை விளக்குக.

1 பொதுச்சபை

2 பாதுகாப்புச்சபை

3 செயலகம்

4 சர்வதேச நீதிமன்றம்

5 சமூக பொரளாதார சபை

6 நம்பிக்கை பொறுப்பாண்மைச் சபை

**13 உலக நாடுகளிடையே சமாதானத்தைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை எடுத்த முயற்சிகள் எவை?**

1 சுயஸ் நெருக்கடி

2 வளைகுடா நெருக்கடி

3 கியூபா நெருக்கடி

**14 தற்கால உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை?**

1 பொருளாதாரத்தடை விதித்தல்

2 அணு ஆயுதங்களைக் குறைக்கவும் அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கையெடுத்தல்

3 சமாதானப்படையை ஈடுபடுத்தல்